www.padippakam.com



கலாநிதி.கா.சிவத்தம்பி

# தமிழ்த் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்

தமிழ்த் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த்தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்

கலாநிதி. கா. சிவத்தம்பி

ஈரோஸ்
ஆவணக்காப்பக வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்த் தேசியமும் சமுதாயக்கொந்தளிப்பும்
கலாநிதி கா. சிவத்தம்பி முதல் பதிப்பு 1986 பெப். 1

1986 ஜனவரி 2, 3, 4, 6, 7, 8ஆம் திகதிகளில் 'ஈழ முரசு'- நாளேட்டில் வெளிவந்த இவ்வுரை தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.

இது தமிழ்த்தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும் என்ற தலைப்பில் பேராசிரியர் சிவத்தம்பி 31.12.85 இல் யாழ், சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நிகழ்த்திய ஹண்டி பேரின்ப நாயகம் நினைவு ஆங்கிலப் பேருரையின் தமிழ் மொழி பெயர்ப்பு.

இவ்வுரையில் தெரிவிக்கப்படும் கருத்துகள் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுடையது.

ஈரோஸ் ஆவணக்காப்பக வெளியீடு,
தொடர்பு முகவரி: ஈழம், த.பெ. இல: 2356
சென்னை-600 024, இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும்

'தமிழ்த் தேசியமும், சமூக மோதல்களும்' தற்போது இலங்கையில் நிலவிவரும் சிங்களவர்-தமிழர் மனித இன நெருக்கடியைப் புரிந்து கொள்வதற்கான ஒரு பிரயத்தனம். நம் மத்தியில் நடை பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்தின் பண்பை, தன்மையையிட்ட எனது சிந்தனைகளை பகிர்ந்து கொள்வது எனது உத்தேசம். போராட்டத்தினது தன்மையையும் பண்பையும் நாம் திண்ணமாகப் பற்றிக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால், எம்மத்தியில் நிகழ்ந்து வருவது என்ன என்பது குறித்த எமது மதிப்பீடு தப்பானதாகி விடலாம் என நான் பூரணமாக நம்புகிறேன். தவறான மதிப்பீடு பிழையான மனப்பான்மைகளுக்கும் செயல்களுக்கும் ஒருவரை இட்டுச் செல்லக் கூடும். ஆகவே, எடுத்துக்காட்டாக விளங்குவதாயின், ஒரு சில மரங்களைப் பார்ப்பதோடு நின்றுவிடாமல், அவற்றுக்கு அப்பாலுள்ள காடு கண்களிற்படுதல் முக்கியமாகும்.

இன்றைய அரசியல் சம்பவங்களை ஒளிவுமறைவின்றிப் பின்வருமாறு விவரிக்கலாம் :-

தமிழர் நடத்திவரும் இப்போராட்டம், உறுதியாக்கப்பெற்ற, பாதுகாப்பான, ஓர் அரசியல் அந்தஸ்தை ஈட்டிக் கொள்ளும் பொருட்டானது. நிலைபேறுக்கப் பெற்ற ஓர் அந்தஸ்துக்கான இப் போராட்டத்தின்போதும், அதன் காரணமாகவும் கட்டவிழ்த்து விடப் படும் சம்பவங்களே இவை.

இந்தப் போராட்டத்தின் கதி முன் என்றுமில்லாத படியான உச்சத்தை எய்தியுள்ளது. அதில், இலங்கைத் தேசத்திலுள்ள தமிழர் ஒவ்வொருவரதும் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்து இருக்கிறது. அவ்வாறாக இருப்பது அவர்களது வாழ்க்கை மட்டுமல்லாது, தெற்காசியப் பிராந்தியத்தின் நாளைய வலிமைச் சமநிலையும் ஆகும்.

ஆகையால் இப்பிரச்சினை இரண்டு மட்டங்களில் வைத்து நோக்கப்பட வேண்டியதாக உள்ளது: ஒன்று, இலங்கை நாட்டு மட்டத்தில்; இரண்டாவதாக, பிராந்திய அனைத்து நாட்டு மட்டத்தில்.

படிப்பகம்

www.padippakam.com



நாம் அப்பிரச்சினையின் மத்தியில் வாழ்வோர் அத்துடன் ஏதோ ஒரு வகையில் அதிற் பங்குபற்றிக் கொண்டும் இருப்போர். ஆதலால், மேற்போந்த முதலாவது, அதாவது இலங்கை, மட்டத்தின் மீது எமது கவனத்தைச் செலுத்துவது பிரதானமாகும்.

இலங்கை மட்டத்தில் வைத்து இனங்காணப் படுகையில், பிரச் சினையின் அம்சங்கள் வருமாறு :

(அ) சிங்களவர் / தமிழர் உறவுகள் தொடர்பான அம்சங்கள். (முஸ்லீம்கள் / தமிழர்கள் உறவுகள் சம்பந்தமான அம்சங்கள் இவற் றினின்றும் எழும்.)

(ஆ) இலங்கையில் உள்ள தமிழர் மத்தியில் நிகழ்வன பற்றிய அம்சங்களும் அத்தமிழர்களுக்கு நிகழ்வனபற்றிய அம்சங்களும்.

(இ) சிங்களவர் மத்தியில் நடைபெற்று வருவன பற்றிய அம் சங்களும், அவர்களுக்கு நடைபெறுவனபற்றிய அம்சங்களும்.

மேற்குறித்த மூன்றாவது அம்சத்தை ஆராய்வது என் உத்தேசம் அல்ல. நான் முக்கிய அக்கறை கொண்டு இருப்பது இரண்டாவது அம்சத்தின் மீதுதான். இலங்கையிலுள்ள தமிழர் மத்தியில் நிகழ்வன பற்றிய அம்சங்களும், அவர்களுக்கு நிகழ்வனபற்றிய அம்சங்களும். ஆனால் முதலாவது அம்சத்தையிட்டுக் குறிப்பிடாது, இரண்டாவது அம்சத்தைக் கையாள முடியாது. ஆகவே, இப்பேருரையின்பேரது, முதலாம், இரண்டாம் அம்சங்களைக் கையாள்வது எனது குறிக்கோளாக அமையும். அவ்வாறு கையாள்கையில் இரண்டாவது அம்சத்தினை நான் வலியுறுத்தி நிற்பேன்.

எம்மைச் சூழச் சம்பவிப்பனவற்றைக் காணும், கேட்கும் சாட்சி கள் நாம். அவ்வகையில் எமக்கு நாமே விடுக்கக் கூடிய ஒரு வினா: இலங்கையில் தமிழர் வாழும் பிரதேசங்களில், சரியாக என்ன போராட் டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது? விடை: இது ஒரு சமூக அரசியற் போராட்டம்; அதில் கருத்தூன்றி இருப்பது சமுதாய பாகத்தைவிட, அரசியற் பாகத்தின்மீதே ஆகும். மேலும் சமுதாய பாகமானது அரசியல் பாகத்தினுள் அடங்கியிருக்கிறது. அதனையும், சமூக அல்லது சமுதாய பாகமும் ஒன்றைவிட்டொன்று இணைபிரியா தன என்பதையும் நாம் இங்கு விரைவிற் காண்போம்.

'எமது சிந்தனை தெளிவுறும் நோக்கத்துடன், இவ்வரசியற் போராட்டத்தை விவரிக்கச் சற்று முயன்று பார்ப்போம்.

படிப்பகம்

www.padippakam.com



ஏலவே குறிப்பிடப்பெற்றபடி, இலங்கைத் தமிழர்களுக்கு நிலை பேருக்கப்பெற்ற ஓர் அரசியல் அந்தஸ்திற்கானதே இப்போராட்டம். இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் விடுதலைப் போராளி இயக்கங்களுக்கும் இடையில் நடந்தேறிய திம்பு மாநகர் முதலாம் கட்ட உரையாடல்களின்போது சுருங்க எடுத்தியம்பப்பெற்றவாறு, இலங்கைத் தமிழ் மக்களின் புதிய அந்தஸ்து பின்வரும் அடிப்படையில் அமைந்ததாக இருக்கும் :

1. தமிழர்கள் என்போர் தனிவேருன ஒரு தேசிய இனமாவர் எனக் கணித்துக்கொள்ளல்.

2. தமிழர் தாயகப் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு உத்தரவாதம்.

3. தமிழரின் சுய நிர்ணய உரிமைக்குக் கணிப்பு.

4. பெருந்தோட்டத் தமிழர்களுக்குப் பூரண பிரஜாவுரிமைக்குரிய உரிமை.

இங்ஙனமாக, தமிழர்களின் போராட்டமானது, அவர்களது மனித இனத்துவம், அவர்களது பிராந்தியமயம் என்பவற்றின் அடிப்படையில் அமைந்ததாகும்.

கோரிக்கைகளைக் குறிப்பிடுவதுமட்டும் போதாது. போராட்டம் நிகழும் களமும் அதனையொத்த முக்கியத்துவம் வகிக்கிறது. போராட்டம் ஒரு யுத்தச் சூழ்நிலையில் நிகழ்ந்து கொண்டிருக்க, தாக்குதல்களும் பதிலடிகளும் அங்கு இடம்பெறுகின்றன. தமிழரின் போராட்டத்தின்கண் முனைப்பாகச் செயற்படுவது ஒரு வன்முறைப் போராளித்துவம். அது இலங்கைத் தீவினுள் சட்டவிரோதமானது எனப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு சட்டம் ஆக்கப்பட்டுள்ளது. சட்ட ஒழுங்கு விதிகளும் விதிக்கப்பட்டன. இவையெல்லாம் இருந்தனவாயினும், இத்தீவுக்கு வெளியே, மலைப்பாங்கான பூட்டான் நாட்டில், அதன் தலைநகராகிய திம்பு மாநகரில், இணக்க உரையாடல் மேசையின் இருமருங்கும் அமர்ந்த வண்ணம் அவர்களை, தமிழர் விடுதலைப் போராளிகளை சந்திக்க வேண்டியதாயிற்று.

பிணக்குகள் வெளிக் கொணரப்பெற்று முன் வைக்கவும் தீர்வு காணவும் படுதற்கு ஏற்ற பாரம்பரிய அரங்கு பாராளுமன்றமே. இத்தகைய பாராளுமன்றம் அல்லது நாடாளுமன்றம் முற்ருக 'முறிந்து போன' நிலையில் இலங்கைத் தீவில் பயனற்றுப் போயிற்று. தீர்வு ஒன்றை ஏற்படுத்த ஆற்ருத ஓர் அரசியல் சக்தியாக அது வலு

படிப்பகம்

www.padippakam.com



இழந்து போனமைக்கும் இப்போராளித்துவத்திற்கும் இடையில் காரண-காரிய (அல்லது ஏது-விளைவு) தொடர்பொன்று உண்டு.

இலங்கைத் தமிழர் விடுதலைப் போராட்டக் களத்தின் மூன்றும் அம்சமாக விளங்குவது இந்திய ஈடுபாடு. இவ்விந்திய ஈடுபாட்டிலும் இரு வேறு அம்சங்களைக் கண்ணுறலாம். தெற்கு ஆசியாவில் முனைப்பான ஆற்றல் பாலிப்பது இந்திய நாடு. அது முதலம்சம். இரண்டாவது அம்சம் அதனைவிட முக்கியமானது. இந்தியாவிலுள்ள தமிழர்கள் ஒரு முழு மாநில அரசாக, தமிழ்நாடு என அத்தேசத்தின்கண் இடம் வகிக்கின்றனர். இலங்கையில் உள்ள அவர்களது சகோதரர்பால் காட்டி வரும் அக்கறை, கவலையில் 'நாம் இந்திய தமிழ்நாட்டு தமிழர்கள்' இலங்கைத் தமிழர் மீது எமக்குள்ள கவலை, அக்கறைக்கு மன்னிக்கு வேண்டும்' என்ற தோரணையில் அல்லவே அல்ல, இந்த அம்சம், தமிழ்த்தேசியத்திற்கு மேலுமொரு பரிமாணம் தருகிறது. ('PANTAMILIAN SENTIMENT) தமிழர் அளாவிய பரிந்துணர்வு என இதனை எடுத்துக்கொள்ளலாம்.

## தமிழர் ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப்பட்டுள்ளனர் !

போராளித்துவம், உள்ளூர் அரசியலமைப்பின் செயலிழப்பு (முறிவு), அரசியல் தலையீட்டுக் கோரிக்கை ஆகியன ஒருங்கிணைந்து தொழிற்பட்ட அனுபவம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் என்றுமே காணப்பட்டது கிடையாது. இவைகுறித்து எழுந்துள்ள சிலேசங்கள் உச்சம் பெற்று இருப்பதும், இந்நிலைமைகளை அணைந்து போகச் செய்யும் திட சங்கற்பம் அப்பட்டமாகத் தெரிவதும், புரிந்து கொள்ளப்படத் தக்கவையே.

இலங்கையில் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் சமுதாயத் தோற்றுவாய்களும், போராட்டம் நடத்தப்படும் விதத்தின் சமுதாய விளைவுகளும் உள்ளபடியாக ஏறத்தாழத் தமிழர் ஒவ்வொருவரையும் அப் போராட்டத்தினுள் வரும்படி ஈர்த்துள்ளன. தமிழர் வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் இப்போராட்டத்தினால் பாதிக்கப்படுகிறது. இலங்கையர் குடும்பங்கள் 'கட்டுச் செட்டாக' கணவன் மனைவி, குழந்தைகள், பணியாள் என்றும் உள்ளன. வேறு சில, இவர்களோடு, ('எக்ஸ்டென்டெண்ட் பாமிலி') கணவன் மனைவியின் சகோதரர், பெற்றோரையும் உள்ளடக்கியனவாக 'விரிவாகி' இயங்குவதும் உண்டு. தமிழரின் இந்த உரிமைக் கோரிக்கைப் பிரச்சினை காரணமாக, ஏதாவது ஒரு வகையில் துயருக்கு ஆளாகியிராத இலங்கைத் தமிழ்க்

படிப்பகம்

www.padippakam.com



குடும்பம்; அது சாதாரண குடும்பமாளுலென்ன, விரிவாகிய குடும்பம் ஆளுலென்ன, ஒன்ருவது கிடையாது எனத் துணிந்து கூறலாம். அது நிராகரிக்கப்படும் என அச்சம் கொள்ளத் தேவையே இல்லை.

இலங்கையிலுள்ள தமிழர் விடுதலைப் போராட்டம் எனப்படுவது என்ன என்பதையும், போராட்டக் களத்தையும் வர்ணித்தாயிற்று. இனி அரசியல் விஞ்ஞான வார்த்தைகளில் அதனை எடுத்துரைப்பது முக்கியமாகும். திம்பு மாநகர உரையாடல்களின் போது தமிழர் தரப்பினுல் முன்வைக்கப் பெற்ற கோரிக்கைகள் நான்கினையும் நுணுக்கமாகப் பகுப்பாராய்வு செய்தால் கூட்டுமொத்தமான கோரிக்கை, ஒரு நாடாக, ஒரு தேசமாக, கணிக்கப்பெறுதற்கானதே ஆகும் என்பது தெளிவாகப் புலப்படும். இவ்வண்ணமாக, தமிழரின் போராட்டம் தேசியத்துவமானது ஆகின்றது.

போராட்டத்தினது நடப்பிலுள்ள, அதாவது தற்போதைய, கட்டத்தின் மெய்ப் பண்பை நிச்சயப்படுத்திக் கொள்வதும், அப் பண்பினை என்று எவ்வாறு அது ஈட்டிக் கொண்டது என்பதை வரலாற்று ரீதியாக வரையறுத்து உறுதிப்படுத்திக் கொள்வதும், எமக்கு வாய்ந்த ஒரு முக்கிய பணியாகும் என நான் உணர்கிறேன்.

அப்பண்பை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு ஜேதசியம் எனும் பதம் சரியாக எதனைக் குறித்து நிற்கிறது என நாம் அறிந்து கொள்ளவேண்டி இருக்கிறது. அரசியல் விஞ்ஞான நியதிகளின் படிக்கு,

'மக்களுடன் கூட அரசினை அல்லது நாட்டினை அடையாளம் கண்டு கொள்வதைக் குறித்து நிற்பது தேசியம். அல்லது, மனித இனம் வாழ் பிரதேச வாரியான கொள்கைகளுக்கு இயைய, அரசின் பரப்பளவை நிர்ணயித்தல் விரும்பத்தக்கது என்ற தன்மையையாவது குறைந்த பட்சம் தேசியம் குறித்து நிற்கும்.

தேசிய இனம் ஒவ்வொன்றும் ஓர் அரசாக உருவமைதல் வேண்டும் எனும் கோட்பாடு பொதுவாகக் கணிப்புவழங்கப் பெற்று இருந்தது. தேசிய யுகத்தில் மாத்திரமே இப்பொதுக் கணிப்பு வழங்கப் பெற்றிருந்தது. அத்துடன் அந்த அரசு அத்தேசிய இனம் முழுமையையும் உள்ளடக்கியதாதல் வேண்டும் என்பதும் அத்தத்துவத்தில் கணிப்புப்பெற்றிருந்தது.' ['என்ஸைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா, வால்யூம் II. 1917.]

'சக - தேசிய இனங்கள் சுயாட்சி நடத்துகையில், அவர்களுடைய அரசு அரசியல் சட்ட பூர்வமானது என்பதை அந்த உன்னத குறிக்

படிப்பகம்

www.padippakam.com



கோள் தத்துவமானது குறிப்பாகக் கண்டு கொள்கிறது.

உன்னத குறிக்கோள் தத்துவ வகையில் தேசியமானது அடக்கு முறையைக் கையாளும் பாங்கு உடையது என்ற தர்க்கமொன்று கோட்பாடுகளை அதிகார தோரணையில் விதிக்கும் மார்க்ஸிஸ வட்டாரங்களில் எழுப்பப்பட்டு உள்ளது. தொடர்ந்தும் அது தேசியத்தைப் பின்வருமாறு சாடுகிறது; பிற குழுக்களின் பால் அது பகைமை பாராட்டுகிறது. வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் போக்கு அதனிடமுண்டு. ஆகையால் தேசியம் பற்றிப் பெரிதாகக் கூறும்குழு தனது சூறையாடலையும் அடக்கு முறையையும் தொடர்வதற்குத் தேசியம் அங்ஙனம் அனுசரணையாக இருக்கிறது.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பதுகளில் ஜேர்மனியிலும் இத்தாலியிலும் தேசிய உணர்வு பாஸிஸ சூறையாடலுக்கு ஆளாயிற்று. அத்தகு சூறையாடலின் முன்னிலையில் தேசியம் ஒரு பிற்போக்குத் தத்துவ ஞானம் ஆகும் என உருவகப்படுத்திக் காட்டுவது கட்டாயம் ஆக்கப்பட்டு இருந்தது. (இன்றும் கூட, வெள்ளையரின் தென்னாபிரிக்காவில் தொடர்ந்தும் இச் சூறையாடல் இடம் பெற்று வருகிறது.)

ஆனால், இரண்டாம் உலக மகாயுத்தம் நேர்ந்தது முதல் கொண்டு மூன்றும் உலகில் இடம்பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்திகளை முன்னிட்டு, சரித்திர முக்கியத்துவமிக்க தேசியத்தின் முற்போக்கான பங்கினை முற்றாக மறுதலித்துரைப்பது கடினம். அத்தேசங்கள் பலவற்றில் தேசியம் அத்தகைய பங்கு வகித்து உள்ளது. தேசிய விடுதலை எனும் பதம், உள்ளபடியாக பின்வரும் அர்த்தத்தில் முக்கியமான ஒன்று ஆகும்: ஆக்கபூர்வமும் முற்போக்குமுள்ள ஒரு தேசியத்தையே அது முழுமையும் குறிப்பிடுகிறது.

'ஜனநாயகம், பாஸிஸம், கம்யூனிஸம் எனப் பல்வேறு திசைகளில் தேசியம் செல்லக் கூடுமாதலாலும், பல்வேறு வகுப்புகளுடன் அது தொடர்புறுத்தப்படக் கூடியது ஆதலாலும், தேசியம் பற்றிய பொதுக் கோட்பாடொன்று இருக்க முடியாது எனத் தர்க்கிக்கப்பட்டுள்ளது. தேசியத்தின் எல்லா வடிவங்களையும் விளக்கத்தக்க அல்லது தேசிய இயக்கங்களினது இன்றியமையாதனவும் அகில உலகிற்கும் பொருந்துவனவுமான அங்க இலட்சணங்களுக்கு வரைவிலக்கணம் கூறவல்ல சமூக நடை முறையொன்றை அடையாளம் காணக்கூடிய தேற்றம் எதுவுமில்லை. இன்மைப் பாங்கான இக் கருத்து முடிபுக்குப் பரவலான வரவேற்புக் கிடையாது.

தேசியமானது தர்க்க ரீதியாகச் சிக்கலானதாயினும், பின்வரும் பொதுப் பண்புகள் கொண்டு விளங்குகின்றமை, சமூக விஞ்ஞானச்

படிப்பகம்

www.padippakam.com



கருத்து ஒருப்பாடு பெற்றுள்ளது. (1) ஆளப்பட்டோரது அதேகலாச்சார இலட்சணங்களையும் (குறிப்பாக மொழியையும்) மனித இன வாரியான அடையாளத்தையும் ஆட்சிபுரியும் அரசாங்கங்கள் பகிர்ந்து கொள்வனவாக இருத்தல் வேண்டும் எனும் கோரிக்கையின் அடிப்படையில் தேசியம் அமைந்தது ஆகும். (2) அதன் விளைவாக, கலாச்சார தேசியமானது ஓர் அரசியல் தேசியத்திற்கு வேண்டிய அடித்தளத்தினைத் தயாராக்குகிறது. எடுத்துக் காட்டாக, ஆபிரிக்காவிற் போல, ஒரு மொழிக்குப் புத்துயிரூட்டி எழுப்புவதன் வாயிலாக மூதாதையர் வழிவந்த தேசிய அருஞ் செல்வத்தைப் பேண அல்லது மீண்டும் உண்டாக்கிக் கொள்ளக் கலாச்சார தேசியம் நாடுகிறது. அதே சமயம் அரசியற் தேசியம் நாடி நிற்பது சுய நிர்ணயத்தையும் அரசியல் உச்ச ஆதிக்கத்தையுமாகும். (3) வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பயன் படுத்தும் நவீன முறைமைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தியானது ஐக்கியப் படுத்தும் தேசிய உன்னத குறிக்கோள் தத்துவங்களைப் பரப்பத் துணை நிற்கிறது. (4) தேசிய இனத்தவர் அல்லாதோருக்கு எதிராக, ஓரளவு பொருளாதார பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்வதன் வாயிலாக, கீழமைந்த வர்க்கங்களைத் தேசிய உன்னத குறிக்கோள் தத்துவங்கள் வலிமையாகக் கவர்ந்து இழுக்கின்றன, ஆயினும், இத்தத்துவார்த்தம் அல்லது தத்துவங்களின் கருப்பொருளானது பொது விதியாக, அறிவாளி வர்க்க விளிம்பில் உள்ளோர்களாலேயே அபிவிருத்தி அடைகிறது. காட்டாக (உதாரணமாக), 'வெள்ளையர்'ின் கல்வி நிறுவனங்களுக்கு வெளியே ஒதுக்கி விடப்பட்ட கறுப்பர் இன அறிவாளிகள், தேசியத்தினுற் கவரப்பட்டனர். (5) இருபதாம் நூற்றுண்டில், தேசியமானது 'காலனித்துவ, விடுதலையுடனும் மூன்றும் உலக சமுதாயங்களின் அபிவிருத்தியுடனும் மாத்திரம் அல்லாது, சமகால முதலாளித்துவ சமுதாயங்களினுள் பிராந்திய சமத்துவப் போராட்டத்துடனும் கூடத் தொடர்பு உடையதாக கொள்ளப்படுகிறது.

## 1958ல் தொடக்கப்பட்டது
## 1983ல் உச்சமடைந்தது

ஆகையால், இங்ஙனமாக ஒரு போராட்டத்தில் இயங்கிவரும் உன்னத குறிக்கோள் தத்துவமானது தேசியமான ஒன்று எனத் தீர்மானித்துக்கொள்வதற்கு, இரண்டு அம்சங்கள் குறித்து உசாவியறிய வேண்டியதாகின்றது; 1 அப்போராட்டம் கோரி நிற்கும் அரசியல் ஒழுங்கமைவு இலக்கு யாது? அது ஏதாவது ஒரு வடிவச் சுயாட்சியா? 2 வேறுபாடு அற்றவாறாக (மிகப் பெரும்பாலும்), அப்போராட்டம் ஒருவர்க்கத் தலைமையினுல் நடாத்தி வரப்படுவது ஆதல் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



வரலாற்றுக் காரணியாகக் காணப்படுமிடத்து இது தவிர்க்கவொண்ணுதது. அப்படியிருப்பினும், குறித்த குழுவின் மக்கள் எல்லோரையும் அம்மனித இனக் குழுவில் அவர்களது அங்கத்துவ வகையில், அல்லது அந்த 'நாட்டுமை' யில் அவர்களது அங்கத்துவ வகையில், அப் போராட்டத்தினுட்கொண்டு வருகிறதா?

''நாட்டுமை'' உணரப்பெற்றும் கருத்தேற்கப் பெற்றும் இருந்து, போராட்ட இலக்கு சுயாட்சியாக இருக்குமானுல், ஐயமின்றி, அது ஒரு தேசியப்போராட்டம்தான். சுய ஆட்சியானது குறித்த பிராந்தியம் ஒன்றில் இடம்பெறும்படியாக இருப்பின், போராட்டத்தினது தேசியப் பண்பையிட்டு எந்த ஒருவித ஐயமும் இருக்க முடியாது. அரசியற் சக்தி பாலித்தற்கு, பிராந்தியமானது ஒரு பிரதான கட்டாய காரணி ஆகும்.

இப்போதளு முறைச்சட்டக்கோப்பு ஒருகால் கிடைத்துவிடும் பட்சத்தில் 'போராட்டத்தின் பண்பையும் அப்பண்பம்சம் உக்கிரம் பெற்ற வரலாற்றையும் நிர்ணயித்துக்கொள்வது கடினமானது.

சிங்களவர் - தமிழர் உறவுகளில், அல்லது தொடர்புகளில் 1983 ஆம் வருடம் ஒரு மாபெரும் மைல்கல் ஆகும் என்பது நன்கு அறியப்பட்டவொரு மெய்ம்மையாக உள்ளது. 1958 ஆம் ஆண்டு தொடக்கிவைக்கப்பட்ட ஒரு போக்கினை, 1983 ஆம் ஆண்டு ஓர் உச்சகட்டத்திற்கு எடுத்துச்சென்றது. 1958 ஆம் ஆண்டு தொட்டு இலங்கையில் வெடித்துக்கிளம்பிய மனித இனக்கலவரங்களில் எல்லாம் மிகப்பெரும்பாலும் சிங்களவர் வாழும் பிரதேசவாசிகளான தமிழர்களே பிரதானமாகக் காயம்பட்டோரும் அத்துடன், அல்லது அப் பிரதேசங்களினின்றும் விரட்டியடிக்கப்பட்டோரும் ஆயினர்.

தலைநகருக்கு வெகு தொலைவான சிங்களப் பிரதேசங்களிலேயே முதலில் தமிழருக்கு இக்கதி நேர்ந்தது. 1977 முதற் கொண்டு தமிழருக்கு எதிரான இத்தகைய மனித இனக்கலவரச் சம்பவங்கள் எண்ணிக்கையிலும் உக்கிரத்திலும் ஓங்கின. 1983 ஆம் ஆண்டில் தமிழர்கள் நூறு வருடங்களுக்கு மேலாக வாழ்ந்துவந்த இந்நாட்டின் தலைநகரான கொழும்பிற்கூட, அவர்களுக்குப் பாதுகாப்பில்லை எனக் காட்டப்பட்டது. 1983 ஆம் ஆண்டிற்தான் சிங்களப் பிரதேசங்களில் உள்ள தமிழர் ஒருவர் சிங்கள மொழி மூலம் கல்வி பயிலவோ, ஒரு சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்யவோ தயாரானவராக இருந்தாலென்ன, அவருக்குப் பாதுகாப்புக் கிடையாது என்பது நிரூபணமாயிற்று. தமிழர்கள் இலங்கைத்தீவு நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் மாத்திரமே, அதாவது அவர்களுடைய பாரம்பரியத் தாயகத்தில்

படிப்பகம்

www.padippakam.com



மாத்திரமே, பாதுகாப்பு உடையவர்கள் என நிரூபிக்கப்பட்டது.

ஆகையால், இலங்கையின் வடக்கும், கிழக்கும் தமிழர்களுக்குப் பாதுகாப்பானவை என்பதை உறுதிசெய்து கொள்வது முக்கிய மாயிற்று.

நாடு முழுவதையும் வாழிடமாகக் கொள்வதற்கு ஒவ்வொரு வர்க்கும் உரிமையுண்டு எனவும், இலங்கையிலுள்ள இடம் எதுவா யினும் எந்தவொரு குழுவினதும் பாரம்பரிய தாயகமல்ல எனவும், அதிகாரபீடத்திலுள்ளோர் விடுத்த கூற்றுனது, இத்தீவின் வடக்கிலும், கிழக்கிலும் கூட தமிழர்கள் பாதுகாப்பு இல்லாதோராகி உள்ளனர் என்ற அச்சத்தை உண்டாக்கத் தொடங்கியது. இராணுவத்தினாலும், பொலிஸினாலும் தமிழரின் அந்த அச்சம் நன்கு மெய்ப்பிக்கப்பட்டது.

நாட்டின் எல்லாப் பாகங்களும் நாட்டிலுள்ள ஒவ்வொருவரினதும் (வாழிடத்திற்குரிய) உடைமையாகும் என்ற வார்த்தைகளில் அடங்கிய உணர்ச்சிப் பெருக்கு 1983, ஜூலை மாதத்தை உடனடுத்து வெளி வந்திருப்பின், தமிழர்பால் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை அது வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கும். ஆனால் அப்படியல்லாது, அவர்களில் எண்ணற்றோர் வடக்கிலும் கிழக்கிலும் புகலிடம் தேடிக் கொண்ட பின்னர் செய்யப்பட்ட அவ்வறிக்கை வெளியீடானது அவர் களுக்குப் பாதுகாப்பான ஒரேயொரு இடத்தைத்தானும் அவர்களுக்கு மறுக்கும் ஒரு செயலாகக் கொள்ளப்பட்டது.

இவ்வாறாக, நடப்பிலுள்ள போராட்டத்தின் பிராந்தியக் கட்டா யங்கள் தெட்டத்தெளிவாகின்றன; அதன் தேசியப்பண்பு (தன்மை) நன்கு உறுதிப்படுத்தப்பட்டது ஆகின்றது.

ஆனாலும், இந்நெருக்கடி திடீர்த் துரிதம் அடைந்த இத்திகதி யன்று, ஒரு தேச அந்தஸ்து நாடும் தீர்மானம் மாற்றியமைக்கப்பட ஒண்ணாதது ஆயிற்று. இலங்கையில் தமிழர் உரிமைக் கோரிக்கைப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதில் ஒருகாரணியாக, இப்பிராந்திய விடயம் கருத்தில் இடம்பெற்றமையின் ஆரம்பங்களை எல்லை குறித்துக் கொள்வது அவசியமாகிறது.

இப்பணி, 1949 ஆம் ஆண்டுக்கு எம்மை இட்டுச் செல்கிறது. ('சிலோன் ஃபெடெறல் பார்ட்டி') இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாகிய ஆண்டு அது. அரசியல் பொருள் கோடல் வகையில் அக்கட்சியின் தமிழ்ப்பெயர் முக்கியத்துவம் வகிக்கிறது; 'இலங்கைத் தமிழரசுக் கட்சி.' ஆனால் தமிழர்களுக்கு மட்டுமே அது, அம்முக்கியத் துவம் தெற்றெனப் புலனாயிற்று; தமிழர் அல்லாதோர்க்கு அது

படிப்பகம்

www.padippakam.com



''ஃபெடெறல் பார்ட்டி'' யாக இருந்தது. அப்படியிருந்துங்கூட, அதன் பிராந்திய அம்சமானது, சற்றும் குறைவுருது, வலியுறுத்தப்பட்டு விட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவானமை இப்போராட்டத்தில் ஒரு பிரதான மைல்கல்லாக அமையலாயிற்று. ஆயினும், போராட்டத்தின் அத்தியாவசியத் தன்மை மாற்றம் ஏற்பட்டது 1956, 1972, 1978 ஆம் ஆண்டுகளின் பின்பேயாகும்.

இலங்கையில் தமிழ்த்தேசியம் உருவாகையில் அதற்கு உந்து விசைக் காரணியாக அமைந்தது யாது? குமாரி ஜயவர்த்தன இதனையிட்டுக் கூறியுள்ளவை வருமாறு: சிங்களவர்களினதும் தமிழர்களினதும் மொழி உரிமைகளே அடிப்படைவாத விடயம் ஆக, அவற்றைச் சூழ இவர்களுக்கிடையில் பகைமை தலைதூக்கலாயிற்று. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பதுகளில் அவ்விடயம் முன்னணிக்கு வரலானது.

சிங்கள மக்கள் மீண்டும் போலியுணர்வுக்குப் பலியாயினர். முதலாளித்துவ வர்க்கமானது பாட்டாளி வர்க்கத்தினரைச் சூறையாடி வருகிறது. முதலாளித்துவ வர்க்கம் அதற்காகக் கண்டனத் தாக்குதலுக்கு உள்ளாயிருத்தல் வேண்டும். அதனை விடுத்து, அவர்களது மொழி, சமயம், வாழ்க்கைத் தோரணை, தறு குறும்பான அயோக்கியப் பழக்க வழக்கங்கள் என்பவை குறித்துக் கண்டனக் கணைகளுக்கு அவர்கள் ஆளாகினுர்கள். சிறுபான்மை இனத்தவர்கள் பகைவராகத் தோற்றமளித்தனர்.

எழுதுநர்கள், ஆசிரியர்கள், சிறுதரவர்த்தகர்கள் முதலானோரை உள்ளடக்கிய மத்தியதர வர்க்கத்தினர் தமது தீவிரவாதத்தை மறந்து, ''சிங்களம் மாத்திரம்'' என்ற போர்க்கொடி உயர்த்தினர். எடுத்ததற்கெல்லாம் யுத்த சன்னத்தராகும் சுலபமான பாங்கை அடியொற்றி, அவர்கள் இனக் குரோத வன்செயல் எனும் சகதிக்குள் துரித கதியில் வழுக்கி. கீழ்நோக்கி கீழ்நோக்கிக் நாட்டை அதனுள் அமிழ்த்துவாராயினர்.

## தமிழரின் தேசிய கருவூலத்தை இடதுசாரிகள் புரிவதற்குத் தவறியமை பரிதாபமாகும்!

சிங்கள மத்திய தரத்தின் இப்போர்த்தொனி 1956இல் சட்ட உருப் பெற்றது ('சிங்களம் மட்டும்' சட்டம்). ஆயிரத்துத் தொள்

படிப்பகம்

www.padippakam.com



ளாயிரத்து அறுபதுகளில் தேசியத்தின் ஒரு சட்ட பூர்வ வடிவம் எனவும், அதற்கு இடதுசாரிக் கட்சிகளின் அங்கீகாரம் கிடைத்தது.

'ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில், இடது சாரிப் பிரசாரத்தின் பிரதான தாக்குமுனை, இலங்கை தமிழ் அரசுக் கட்சியினதும் அதன் தலைவர்களினதும் கோரிக்கைகளைச் சாடும் போக்குக் கொண்டு இயங்கிற்று. ஆவேச மார்தட்டும் பாணியில் சிங்களவர் அப்பிரசார இயக்கத்தை நடத்தினர்.

(குமாரி ஜெயவர்த்தனவின் நூலில் எண்பத்தோராம் பக்கம்)'

'அதுகாறும் இலங்கையில் இடது சாரிகள் இலங்கைத் தீவின் அரசியல் வாழ்க்கைக்குச் செலுத்திய பங்களிப்பு உருப்படியாக இன ஒதுக்கல், இனக் குரோதம் இல்லாத வகையில், ஜனநாயக, சோஷலிஸ, உன்னத குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதாக இருந்தது. உழைப்பாளி வர்க்கச் செயலாக அமைந்த அப்பங்களிப்பு, அவ்வர்க்க ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இருந்தும், அத்தறுவாயில் இடதுசாரி இயக்கம் பாட்டாளி வர்க்கத்தினைப் பலகட்சிக் கூட்டு அரசாங்கங்களுக்கு இட்டுச் சென்றது. அத்துடன் இடதுசாரித் தலைமை நின்று விடவில்லை. அதனிலும் பார்க்க ஆபத்தான இனவாத அரசியலுக்கும் அது பாட்டாளி வர்க்கத்தை வழி நடத்திச் செல்ல ஆரம்பித்தது.

இலங்கையில் பல மனித இனங்களைக் கொண்டமைந்த தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் வர்க்க உணர்வை வளர்த்தெடுக்க ஆண்டாண்டு காலமாக நடாத்தி வரப்பட்ட போராட்டம் கைவிடப்பட்டது. அதற்குப்புதிலாக பாட்டாளி வர்க்க முறைமையினுள் இன பேதம் அல்லது இனக் குரோதம் எனும் நச்சுச் செல்வாக்கு ஊட்டப்பட்டது. அதன் விளைவாக, 1977, 1983 ஆகிய வருடங்களில் இலங்கைத் தீவில் எண்ணற்ற தமிழ் மக்களைப் பலியெடுத்த வேள்விகளில் பாட்டாளி வர்க்கத்தின் பல பகுதியினர் பங்குபற்றினார்கள். ('எத்னிக் அன்ட்கிளாஸ் ஒளற்பேர்ஸ்ற்ஸ் இன் சிறீலங்கா', கொழும்பு, 1985 : பக்கம் 1, 2, 3).

அற்ப கருமங்களுக்கெல்லாம் வெளிக் கிளம்பிய சிங்களவரின் போர் நாட்டத்தினை மெய்யான தேசியம் என இடதுசாரி இயக்கம் இலங்கையிற் கொண்டமை வருந்தத் தக்க விடயமாகும். அரசாங்கம் புரிந்த தமிழர்க்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அவ்வப்போது தமிழர் இயற்றிய பிரதிச் செயல்களே தமிழரின் தேசியத்தினது கருவூலமாயின என்பதைப் புரிந்து கொள்ள இடதுசாரி இயக்கம் தவறியமை பரிதாபத்துக்குரியது.

படிப்பகம்

www.padippakam.com



இடதுசாரி இயக்கம் இவ்வாறு தவறியமையால், 1956 முதற் கொண்டு தமிழரின் தேசிய உணர்வுகள் அகநோக்காக வளர்ச்சி அடையலாயின. தமிழரின் உள்ளுணர்வுகளினது மெய்ப்பண்பை நன்கு உணர்ந்து கொள்ள வல்ல ஓர் இடதுசாரி இயக்கம் இலங்கையில் நிலவியிருக்குமாறுல், தமிழ் மக்களின் தேசியத்திற்குக் கிடைத்ததைவிடப் பரந்த புரிந்துணர்வு உள்ளபடியாக வழங்கப் பெற்றிருக்கும்.

இங்ஙனமாக, இலங்கை நாட்டில் தமிழர் தேசிய உணர்வுகள் 1949 ஆம் ஆண்டு தொட்டு முளைவிடத் தொடங்கியதையும், அத் தேசியத்தின் வளர்ச்சியில் முக்கிய ஏற்றப் படிகளாக 1956, 1959, 1966, 1977, 1983 ஆகியன இடம் வகித்ததையும் காணலாம். தமிழர் கோரிக்கையின் தேசியப் பண்பைத் துலாம்பரமாக எடுத்துக் காட்டும் போக்கு, 1982 வரை தமிழ் மக்களின் தலையாய அரசியற் கட்சியாக விளங்கிய கட்சி, அரசுடன் நடத்திவந்த பேரம் பேசுதலில் எப்பொழுதும் தென்பட்டதில்லை. ஆயினும், ஒன்று மட்டும் உண்மை; 1983 ஆம் ஆண்டுடன் தமிழரின் உரிமைப் போராட்டத்தில் பிராந்திய அம்சமே அச்சாணி முக்கியத்துவம் வகிக்கலானமை தவிர்க்க முடியாததாயிற்று.

இதனின்றும் அடுத்து எழும் விடயம் யாது? 1949க்கு முந்தி தமிழர் ஈடுபட்டிருந்த அரசியல் நடவடிக்கைகளில் தேசியம் எனும் கருத்தேற்பு வாரியாக, தென்படும் சிறப்பு அம்சங்களை அடையாளங் காணும் பணியே அவ்விடயம்.

பின் நோக்காகச் செல்வோமாயின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ். இளைஞர் காங்கிரஸ், சேர். பொன்னம்பலம் அருணசலத்தின் தேசிய காங்கிரஸ் ஆகிய மூன்று காங்கிரஸ்களையும், 1921 இல் ('தமிழ்ஸ் அஸோஸியேஷன்') உருவான தமிழர் கழகத்தினையும் காண்போம். இவை ஒவ்வொன்றும் தமிழர் தேசியத்தை எய்தும் குறிக்கோள் நோக்கிய முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல் ஆகும்.

இலங்கையிலுள்ள தமிழர்களை, இலங்கையின் பொதுவான அரசியல் வாழ்வினுள் அடங்கியபடியோ, புறம்பாகவோ, ஒரு மனித இனக் குழுவாகக் கொண்டு, குறிப்பான ஓர் அரசியல் அந்தஸ்தை அவர்களுக்கு ஈட்டிக் கொடுத்ததற்கு அவை முயலாதிருந்த வரைக்கும், தமிழர் தேசியம் நோக்கிய ஏற்றப் படிகளாக அவை கருதப் படலாமே தவிர அவையே தேசியத்தின் வெளிப்பாடுகளாகமாட்டா.

அடுத்து எமது மனத்திரையில் எழுவது ஆறுமுக நாவலரின்

படிப்பகம்

www.padippakam.com



பங்கு. இதுவரை நாம் சீர்தூக்கிப் பார்த்த வகையில் நோக்கப் பட்டால், 'தேசியத்தின்பாற்பட்டது' எனும் பதத்திற்குப் பெரும் பாலும் அவரது பங்கு அருகதை உடையதாகாது எனவே கொள்ளல் வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்களின் கலாச்சாரம் பிரத்தியேக மானது எனும் நிலையைப் பேணிவருவதற்கு அவர் பாடு பட்டுழைத் தார். சமுதாயப் படியேணி ஒழுங்கமைப்பு சைவ சமய தத்துவம் என்பவற்றின் கண்டிப்பான, நெகிழ்ந்து கொடுக்காத பண்பையும் வலிமையையும் தம்மால் ஆனமட்டும் நாவலர் பெருமான் பயன் படுத்தினர். பிரித்தானியப் பேரரசிற்கு அவர் முரணானவரல்லர். அச் சாம்ராஜ்ய சார்பானவராக இருந்தாராயினும், நாவலர் கிறிஸ் தவ எதிர்ப்பாளராக வாழ்ந்தார். அந் நாட்களில் சமுதாய ஏணி யில் விரைவான ஏற்றம்பெற, கிறிஸ்தவ மதத்தைத் தழுவும் வழமை, வாய்ப்பான, புதிய ஓர் உபாயமாகக் காணப்பெறவே, நாவலர் அம்மதத்தை எதிர்த்து நிற்பாராயினர்.

## *புதிய அரசியல் ஆட்சி நிர்ணயமான பின்னர் மீண்டும் அவர்கள் மீள்வர்!*

இவை எப்படித்தான் இருப்பினும், ஆறுமுகநாவலரின் எழுத் துப் படைப்புகளும் பணியும் ஓர் இந்தியத் தமிழர் உணர்வினின் றும் குறிப்பாக வேறுபட்டவராக, ஓர் இலங்கைத் தமிழர் உணர்வு உண்டாகும் நிலைக்கு இட்டுச் சென்றன. சற்சூத்திரங்கள், பிரா மணரைக்கூட விஞ்சிய வேளாளரின் உன்னத மேம்பாடு, சைவ சித் தாந்தத்தின் உன்னத மேம்பாடு, ஆகியவை பற்றிய அவருடைய கருத்தேற்பு ஒன்று இருந்தது. அது யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழர் வாழ்வின் கலாச்சார எல்லைகளை, மனச் சந்துஷ்டியிற் சலனம் ஏற் படுத்தும் வகையில், நிர்ணயித்து அளித்தது.

எனவே, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதுகளின் பிற்பகுதி யில் இலங்கைத் தமிழர் உணர்வொன்றுக்கு உருக்கொடுக்கும் ஒரு பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்ட போது, கண்டன எழுத்துக்களில் நாவலர் பெருமான் அப்பட்டமாக இடம்பெற்று இருந்தமை வியப் பல்ல.

அடுத்து, தமிழ்த் தேசியம் எழுந்தவிடயத்திற்கு வருவோம். 'அர சியல் உன்னத குறிக்கோள் தத்துவமாக' தேசியமானது 1956 க்கு முன்னர் எழுவது துர்லாபமாக இருந்தது. அதுபோல, 1978, 1983, ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் தேசியம் உக்கிரப் படுத்தப் படுவதும் சாத்தியமில்லாதிருந்தது. தமிழரின் பொருளாதார வர லாற்றிலிருந்து இவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

படிப்பகம்

www.padippakam.com



இதற்கு முக்கிய காரணம், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர் பிரபு வர்க்கம் என ஒன்று இருந்தது கிடையாது. தமிழர் பிரபு வர்க்கம் என்ற ஒன்று இருந்தது கொழும்பில் மாத்திரமே ஆகும். கொழும்பிலும் கூட, அவர்களில் மிக அநேகர் உயர் தொழில்களிலும், அதனைவிடக் குறைந்த அளவில், வர்த்தகத் துறையிலும் பார்க்க வங்கித் துறையிலும், பெருந்தோட்டத் துறையிலும் காணப்பட்டனர்.

தமிழர் பிரபுவர்க்கம் யாழ்ப்பாணத்தில் இருந்தபொழுதுங்கூட, நாட்டுப்புறத்தவர் மட்டத்தில் முதலாளித்துவத்துக்கு முன் நிலவிய உறவுகளைச் சீர்குலைக்க அவர்கள் விரும்பவில்லை.

தன்மொழி ஊடகக் கருத்தேற்பு முதன்முதலாக நடைமுறைக்கு வந்த பின்னரே நடுத்தரவர்க்க அபிவிருத்தி உக்கிரம் அடைந்தது. நடுத்தர வர்க்கத்தினுட் தாமும் புகுதல் வேண்டும் என நாட்டுப்புறத்தவர் வைத்திருந்த நம்பிக்கையை அரசாங்கம் வீணாக்கிவிட்டது. தொழில் வாய்ப்புகளுக்கு மாவட்ட ('டிஸ்றிரிக்ற் குவோட்டர்') விகிதாசார மட்டுப்படுத்தல் முறையையும், பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தரப்படுத்தலையும் கையாண்டு அவர்களது இவ்வேணவா, வீண் அவா ஆகிப் போய்விடச் செய்தது அரசாங்கம்.

பிராந்திய நிர்ப்பந்திப்புகளினால் தமிழர் தேசியம் பாதிப்பு உற்றது. சிங்களவரின் சுலபப் போர்நாட்டம் இப்பிராந்திய நிர்ப்பந்திப்புகளை வெற்றிக்கொள்ள தமிழ்த் தேசியத்திற்கு வழிசமைத்துக் கொடுத்தது. யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு மாவட்டப் போட்டா போட்டி, வன்னி - யாழ்ப்பாண மாவட்ட போட்டா போட்டி ஆகியன வெற்றிகொள்ளப்பட்ட விதத்தில் சிங்கள மார்தட்டல் எவ்வாறு உதவிற்று எனக் கண்டுகொள்ளலாம். தமிழர்களின் மனித இனம் காரணமாக அவர்கள் அனைவர் மீதும் விதிக்கப்பட்ட பாரபட்சமே அப்படி உதவியது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதுகளின் முற்பகுதி தொட்டு நடைபெற்ற கமத்தொழில் அபிவிருத்தியானது சந்தைப்படுத்தலை நோக்காகக் கொண்ட பயிர்ச் செய்கை வளர்ச்சியுறவும் மேம்படவும் வழி கோலியது. அவ்விளைப் பொருட்களின் விற்பனைக்கு இத்தீவின் சந்தைகளையே அது நம்பியிருந்தது. ஆனால், 1977 ஐ அடுத்து ஏற்பட்ட விவசாய மாற்றங்கள் அவற்றுக்கு பாதகமாக அமையலாயின.

பயிர்செய்கையாளர்களுக்குச் சாதகமான விலைகளை உறுதி செய்யும் விற்பனை விலை ஆதாரங்கள் போதியன இருக்கவில்லை. கமத்தொழில் உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளின் விலைகள் திடீ

படிப்பகம்

www.padippakam.com



ரென அதிகரித்தன. இச் சூழ்நிலைகளில், கடந்த காலங்களில் மிக விரும்பப்பட்ட, பணம் ஈட்டுவதற்கென்றே செய்கை பண்ணப்பட்ட முக்கிய பயிர்கள் பாதகமான இந்நிலைகளுக்கு இனிமேல் நீண்டகாலம் தாக்குப்பிடிக்க இயலாதனவாகிப் போகலாம். இந்த ஸ்திரமின்மை கமத் தொழிற் சமுதாயத்தினர் மத்தியில் அதிருப்தி விளைத்ததற்குக் காரணம் ஆயிற்று. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அரசாங்கத்திற்கு எதிரான உணர்வு இவ்வளவு தூரம் இன்று மேலோங்கி நிற்பதற்கு நிச்சயம் இந்த அதிருப்தி பங்கு நல்கியிருந்தது.

1983 தமிழர்க்கு எதிரான பெரு வேள்வியில் அழித்து, நாச மாக்கப்பட்டவற்றுள் தமிழர் பிரபு வர்க்கத்தினரின் உயர் தொழில் வாழ்வு அல்லது அவர்களது மூலதனமும் அடங்கிற்று. இவ்வழிவு களோடு இவ்வர்க்கத்திற்குத் தேசிய ஐக்கியம் வேண்டியிருக்கவில்லை. நிலைகுலைந்த சூழ்நிலைகள் முதலீட்டுக்கு உகந்தனவல்ல. ஆகவே, தமிழர் பிரதேசங்கள் அவர்களுக்கு அறவே தோதானவையல்ல என் பது தெளிவு. ஆக, அவர்கள் வெளிநாடுகளில் வதிவோராகி விட் டனர். புதிய ஓர் அரசியல் ஆட்சி நிலைமை நிர்ணயமானதும், அவர்கள் இத்தீவுக்கு மீள்வர் எனலாம்.

தமிழரது இப் போராட்டம் தமிழரின் தேசியப் பண்பார்ந்தது என்பதைச் சுருக்கமாக நாம் கண்டு கொண்டோம். எமக்கு எஞ்சி யுள்ள பணி இப்போராட்டத்தின் தன்மை எப்படி நிர்ணயிக்கப் பெற்றது எனக் காண்பதாகும். இரு கோணங்களிலிருந்து எமது பார்வையைச் செலுத்திப்பார்ப்பது பயனுடையது: முதலாவதாக, இப்போராட்டத்தை மேற்கொள்ள வேண்டி இருந்தோர் யாவர்? இரண்டாவதாக, இப்போராட்டம் எப்படி நடாத்தப்பட்டது?

திரும்பத் திரும்ப எடுத்துரைப்பதாயினும், சில யதார்த்த நிலை களை வலியுறுத்தியே ஆக வேண்டும். தமிழர் தேசியத்திற்கான போராட்டம் எதுவும், பாராளுமன்ற முறைமை ''முறிவுற்ற'' மெய் மைக்கு மாத்திரமன்றி, அதனைவிட முக்கியத்துவம் வாய்ந்தவாருக அரசின் பந்தோபஸ்துப் படைகளின் ஓங்கிய ராணுவமயம் ஆதற் குங்கூட, முகம்கொடுத்தேயாக வேண்டியிருந்தது.

இராணுவமானது இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக, அதா வது 1958 ஆம் ஆண்டு முதற் கொண்டே, வடமாகாணத்தில் பயன் படுத்தப்பட்டு வருகிறது. ஆயுதப்படைகளைப் பிரயோகித்தே 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது. ஆயிரத்து தொள்ளா யிரத்து அறுபதுகள் தொடங்கி பொலிஸ் அட்டூழியங்களும் அதி கரித்து வருகின்றன.

படிப்பகம்

www.padippakam.com



இம் முறைமைக்கு அறைகூவல் விடுப்பவர் எவராக இருந்தாலும், அவர் இவ்மெய்மைகளுக்கு முகம் கொடுத்தேயாக வேண்டியிருந்தது.

பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளற்கான அரங்கு பாராளுமன்றம். ஆனால் இப்பிணக்குத் தீர்க்கும் அதனுற்றல் வரவர மிகுதியும் அரிக்கப்பட்டு வரலாயிற்று. அதனால் சம்பிரதாய அரசியலாளரின் பிடி தளர்ந்து செல்லத் தொடங்கியது. அரசுக்கு எதிராக கிளர்ந்து எழுவோர் அத்தருணம் நடைமுறையிலிருந்த முறைமையின் பலிக் கடாக்களாயினர். ஆனால் அவர்கள் அப்போதெல்லாம் முறைமையின் ஒரு பகுதியாக இன்னமும் ஆகிவிடவில்லை.

இதன் அர்த்தம்? முறைமைக்கெனச் சேர்த்துக் கொள்ளப்பட்டோரிற் பெருமளவிலானோர், உரிமை மறுக்கப்பட்ட மாணவர் சமுதாயத்தினின்றும் வரவேண்டியிருந்தனர். அவர்களும் பல்கலைக்கழக முன் (க. பொ. தா. [உ. த.]) மட்டத்திலிருந்து வரவேண்டியோர் ஆயினர்.

## அரச படைகளிடமிருந்து தமிழ்மக்களை விடுவிப்பதே போராளிகளின் புனித பணி

போதனைச் சிரேட்ட கல்விமான்கள் பல்கலைக்கழக முன் மாணவர்க்குரிய மனக்குறைகளை எடுத்து விளக்கிய போதெல்லாம் அம்மாணவ சமுதாயம் இடையருது அவ்விளக்கங்களுள் கொண்டு வரப்பட்டது. ஆனல் அந்த மாணவர்கள் தரித்து நின்று போராடினர். இதனை நாம் கருத்தில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

முதலில் அவர்களின் வெஞ்சினம் அரசியல் ஆதரவின் 'கறுப்புச் சந்தைக்காரர்' அனைவர் மீதும் பதிந்தது. (பத்திரிகை எதனையும் வாசித்து இதனைக் கண்டுகொள்ளலாம்.) ஏற்கெனவே இராணுவம் அங்கு வந்துவிட்டது. அரசியலும் இராணுவமயமாக்கப்பட்டு இருந்தது. இப்போராளிகளின் வருகையோடு நடவடிக்கைகளின் கதி துரிதம் அடைந்தது.

ஆகையால், தமிழரின் போராட்டத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டோர் இராணுவரீதியாக மட்டும் அல்லாது; இராணுவ முஸ்தீபு வகையிலும் தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தமை தவிர்க்க ஒண்ணுதது ஆயிற்று.

பல்கலைக்கழகக் கல்விக்கு முன்படிப்பிற்குரிய மாணவரே குறிப்பாக ஈண்டு மாணவ சமுதாயம் எனப்பட்டனர். தமிழர் தேசியம்

படிப்பகம்

www.padippakam.com



அவர்களது உன்னத குறிக்கோள் ஆயிற்று. போர் முறை அதனை எய்தும் மார்க்கம் ஆயிற்று. அதன் பொருள் என்ன? இரகசிய இயக்கங்களாக அவர்கள் செயலில் இறங்கவேண்டியோர் ஆயினர்.

இம்மாணவ சமுதாயத்தினது அரசியல் நடவடிக்கைகளில் இத்தகைய மட்டுப்பாடுகளின் முன்னிலையில் இயக்கங்கள் பல்கிப் பெருகியமை போற்றுதற்கு உகந்தது ஆகியது; நடந்தது இதுதான்.

அவர்களது பிரதான அரசியற் கோரிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பது முக்கியமாகும்.

இப்போராளி இயக்கங்கள் எல்லாம் சிங்கள அரச படைகளினால் புரியப்படும் அடக்குமுறைப் பற்றி முதலிடத்தில் வைத்துப் பேசுகின்றன. தவிரவும், இவ்வரசு படைகளிடத்திலிருந்து தமிழ் மக்களை விடுவிப்பது தமது வாழ்க்கையின் புனிதப் பணி எனவும் அவர்கள் வெளிப்படையாக, ஒளிவு மறைவின்றிக் கூறி வருகின்றனர்.

இங்கு, இலங்கையிலுள்ள இப்போராளி இயக்கங்களை, தென் இந்திய தமிழர் தேசியத்துடன் ஒப்புநோக்கிப் பாருங்கள். அங்கு திராவிட இயக்கத்திலிடம் காணப்பெறும் தமிழர் தேசியத்தின் நிலைப்பாடுகள் சிலவற்றை, இன்று வரை இங்கு இப்போராளி இயக்கங்கள் மேற்கொள்ளவில்லை என்பது தெளிவாகக் காணப்படும்.

இலங்கையிலுள்ள தமிழர் போராளி இயக்கங்களின் முதன் முதலான அம்சமெனில், திராவிட, தமிழர் போர் நாட்டம் அல்லது வீராப்புப் பேசுவது எதுவும் இதிற் கிடையாது. இந்தியாவில் உயிருள்ள மொழியாக சமஸ்கிருதம் நிலவிய காலத்துக்கு முந்திய மாபெரும் வரலாறென்று உண்டு. அச்சரித்திர காலத்துடன் தொடர்பு உடைய போர் ஆர்வமே இங்கு குறிப்பிடப்பட்டது. சங்க காலத்து நாகரிகத்தில் உற்பவித்த அரசியல் மயம் ஆக்கப்பெற்ற இலக்கியப் படைப்புகள் தொடர்புறுத்தப்படுவதே கிடையாது.

நான்முகன் படைப்பில் இறைவனின் செல்லப்பிள்ளைகளாக விளங்குபவர்கள் தமிழர்கள். சைவ சித்தாந்தம் மகத்துவமானது. இக்கருத்துக்கள் மிக அண்மைக் காலத்தவை,

தாய்நாடு விட்டகன்ற சக்திகளினால் இவ்விடயவாதத்தினுட் சேர்த்துக்கொள்ளப்பட்டவை. (ராதிகா குமாரசாமி எழுதிய தமிழர் தேசியத்தின் தெய்வாதீதத் தத்துவம அகற்றல் மீதான கட்டுரையுடன் ஒப்பு நோக்குக) இத்தகைய ஒரு நிலைப்பாடு, தமிழர் விடுதலைப் போராளிகளின் எந்த ஒரு பாரிய இயக்கத்தினாலாவது இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



உள்ளபடியாக, நுண்ணிய பகுப்பாய்வு ஒன்றனை மேற்கொண்டால், திராவிடர் வழி வந்தமை, சைவ சித்தாந்தம் என்பவை பற்றிய மனக் கிலேசமானது, பாரம்பரிய யாழ்ப்பாணச் சைவத் தமிழர் பின்னணியினின்றும் வந்தோரிடமே எழுவதைக் காணக் கூடியதாக இருக்கும்.

இத்தமிழர் தேசியம் நிறுவும் போராட்டத்திற்கு உயிரூட்டுவதற்காக வரலாற்று ஏடுகளில் இடம்பெறும் கடந்த காலத்தை அவர்கள் கையாளவில்லை என்பது உண்மைதான். அதே வேளை, திராவிட உன்னத குறிக்கோளாளரினது நியாயப்படுத்துதலையும் தமக்கேயுரிய தனிவேறுந் தன்மையையும் இன்னமும் வலியுறுத்தவில்லை என்பதும் மெய்யே. உள்ளபடியாக, அவர்களுக்கு அவையிரண்டும் அவர்களது பிராமண எதிர்ப்பு நிலைப்பாட்டின் ஒரு அங்கமாக உள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு வினவை எழுப்புவது சாலப்பொருத்தம் உடையது. இத்தமிழர் தேசியம் பிற்போக்கானதாகக் கூடுமா? இதனையிட்டு ஓரளவு விழிப்பு உணர்வு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

இப்போராளி விடுதலை இயக்கங்கள் மார்க்ஸிஸத்தை வந்தடைந்த மாதிரியில் ஒரேவித, ஒத்த உருவமைப்பு உள்ளமையை இதே இயக்கங்களினது வரலாறு காட்டுகிறது.

இவ்ரீதியில் ஆரம்பத்தில் அவை அரசின் அடக்கு முறை பற்றியே குறிப்பிட்டன. மொழி உரிமைகள் பற்றிய மார்க்ஸிஸக் கட்சிகளின் நிலைப்பாட்டை அக்கட்சிகள் மீள்நோக்கிற்கு உட்படுத்தி இருந்தமை காரணமாக, இயக்கங்கள் அவற்றுக்கு அண்மித்த ஒரு நிலைப்பாடு மேற்கொள்ள விரும்பவில்லை. போராட்டத்தை எப்படி நடாத்துவது என்ற வினுகுறித்து மார்க்ஸிஸவாதிகள் அல்லாதோர், மார்க்ஸிஸ-எதிர்ப்பாளர்கள், ஆகிய கட்சிகளின் நிலைப்பாடுகள் இயக்கங்கள் மத்தியில் ஏமாற்றத்தை உண்டுபண்ணின. ஆகவே தேசியவிடுதலைக் கருத்தேற்பு வாயிலாக இவ்வியக்கங்கள் மார்க்ஸிஸத்தை நண்ணின. காலஞ் செல்லச் செல்ல, தீர்க்கமான மார்க்ஸிஸ் உன்னத குறிக்கோள் தத்துவமயமான இயக்கங்கள் தலைதூக்க ஆரம்பித்தன.

□

படிப்பகம்

www.padippakam.com

ஈழப்புரட்சி அமைப்பு EROS
EELAM REVOLUTIONARY ORGANISATION

**எமது சிறு வெளியீடுகள் :**

EROS IS THE ETOHS OF EELAVAR
(Says Saturday Review)
**ஈரோஸ் ஈழவரின் வாழ்க்கை நெறி**
**('சற்றர்டே றிவியூ'வின் பார்வையில்)**

Sri Lanka After Two Years of
Bloodshed : WHAT NEXT ?
**(by KUMAR DAVID)**

**நாடற்றவரானோம்**
**(மலையமக்கள்)**

படிப்பகம்

www.padippakam.com

# EROS
## DOCUMENTATION UNIT

1—2—'86

நாம் ஈழவர்

நமது மொழி தமிழ்

நம் நாடு ஈழம்

படிப்பகம்